1972 சனவரி 25]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த சில அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டதாக அமைச்சரவர்கள் தகவலை வெளியிட்டார்கள். என்றைக்கு சஸ்பெண்ட் செய்தார்கள்? விசாரணை எப்பொழுது முடியும்? துரிதமாக முடிக்க அரசாங்கம் வேண்டிய தாக்கீதுகளை நல்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சென்ற ஆண்டு சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். சீக்கிரத்திலே அவர்கள் மீது விசாரணையெல்லாம் நடைபெற்று முடியும்.

பஞ்சாலைகளுக்குத் தேவையான பஞ்சு

*** 51 வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டு பஞ்சாலைகளுக்கு ஆண்டுக்கு எவ்வளவு லட்சம் பேல் பஞ்சு தேவைப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏறக்குறைய 13.19 லட்சம் பேல்கள்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே உற்பத்தியாகும் பஞ்சின் அளவு ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்கு ஆகும். தமிழ் நாட்டின் தேவைக்கான பஞ்சு பிற மாநிலங்களிலிருந்து நம்முடைய தமிழகத்திற்கு வருகிறது. அந்தப் பஞ்சு வந்து இங்கே செய்ய வேண்டியிருப்பதால் பஞ்சாலைத் தொழிலில் நெருக்கடி ஏற்படுகிறது. எனவே இதைத் தவிர்க்கும் முறையில் இங்கேயே பஞ்சை அதிகமாக உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ஐந்தாண்டுத் திட்டமிட்டு?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாட்டுப் பஞ்சாலைகளில் ஏற்படுகின்ற தொல்லைகளுக்கான காரணங்களில் இது ஒன்று, கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், இதற்காக நம் வேளாண்மைத் துறையில் தனியாக ஒரு திட்டமிட்டு பருத்தி உற்பத்திக்கு ஏற்பாடு செய்து வருகிறார்கள். அதுபற்றி வேளாண்மைத்துறை அமைச்சரவர்களிடத்தில் கேட்டால் விவரம் சொல்லுவார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தமிழ்நாட்டுக்குத் தேவையாக இருக்கக்கூடிய இந்தப் பஞ்சு வட இந்தியாவில், குறிப்பாக மகாராஷ்டிராவில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு பேல்கள் இறக்குமதி ஆகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாநில வாரியாகப் புள்ளி விவரம் இல்லை. நம்முடைய தமிழ்நாட்டில் 5.3 லட்சம் கிடைக்கிறது. மீதி 8 லட்சம் வெளி நாடுகளில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் இறக்குமதி செய்கிறோம். வெளிநாட்டுப் பஞ்சைப் பொறுத்தவரை மாதம் ஒன்றுக்கு 16,240 பேல்கள் தேவைப்படுகின்றன.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, in view of the increasing cost of production due to the high cost of cotton, has this Government represented that there should be price control of various types of cotton that is being used by the mills?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உற்பத்தியை அதிகமாக்காமல் விலையை மட்டும் கட்டுப்படுத்தினால் அது நிலைக்கும் என்று அரசாங்கம் நம்பவில்லை. ஆகவே, பருத்தி உற்பத்தியை அதிகரிக்க தனியாக திட்டமிட்டு வேளாண்மைத் துறையினர் முயற்சி செய்து வருகிறார்கள். நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டுக்கு பஞ்சுக்குப் பதிலாக செயற்கை நூல், ஸ்டேபிள் ஃபைபர் உற்பத்தி செய்வதற்கேற்ற வகையில் அதிகமாக வழங்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி வருகிறோம். அது பஞ்சுக்கு ஒரு சப்ஸ்டிடியூட் என்ற முறையில் நம்முடைய ஆலைகளுக்கு மூலப் பொருளாகக் கிடைப்பது நல்லது என்று கருதுகிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, are the Government aware that the popularity of the cloth produced out of staple fibre is going down and the popularity of the cloth produced out of artificial fibres is going up and if so, whether the Government have decided to encourage handloom weavers to use other types of fibres?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எனக்குத் தெரிந்த வரையில் ஸ்டேபிள் ஃபைபர், நைலான் ஆகியவற்றுக்கு அதிகச் சந்தை பெருகி வருகிறது. தமிழ்நாட்டிலும் ஒரு தொழிற்சாலை இருக்கிறது. நம்முடைய அரசாங்கம் நடத்துகின்ற ஆலைகளுக்குத் தனியாக அலாட்மென்ட் பெற வேண்டுமென்று கேட்டு இந்த ஆண்டு 52 டன் தருவதாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை பருத்தி உற்பத்தியோடு செயற்கை முறையில் மூலப் பொருள்கள் கிடைப்பதற்கும் வழி செய்யப்படும்.

திரு. கே. என். குமாரசாமி : ஸ்டேபிள் ஃபைபர் கிடைக்காத காரணத்தால் பல ஆலைகளில் பல மாதங்களாக வேலை முடங்கி தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா? மத்திய அரசாங்கத்திடம் கேட்டும் மற்ற மாநிலங்களிலிருந்து அதைப் பெற்றுத்தர ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : குறைந்தபட்சம் நம்முடைய மூடப்பட்ட ஆலைகளுக்காவது ஸ்டேபிள் ஃபைபர் தரவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சர் அவர்களுக்கு எழுதினார்கள். மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : ஸ்டேபிள் ஃபைபருக்கும் சிந்தடிக் ஃபைபருக்கும் அதிக கிராக்கி இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது குறித்து மத்திய அரசாங்கத்தில் முறையிட்டுக் கொண்டும் அவர்கள் தரவில்லை என்று புகார் சொல்லுவதை விட இங்கேயே உற்பத்தியை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

1972 சனவரி 25]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உற்பத்தியை அதிகப் படுத்தவும் மத்திய அரசாங்கத்திடந்தான் சொல்ல வேண்டும்.

திரு. சு. துரைசாமி : தமிழ்நாட்டில் இன்னும் கூடுதலாக ஸ்டேபிள் ஃபைபர் யூனிட் போட யாராவது முயற்சிக்கிறார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுவரை அந்த முயற்சி எடுக்கப்படவில்லை.

திரு. கே. என். குமாரசாமி : தமிழ்நாட்டில் பஞ்சு கிடைப்பதற்கும் பம்பாய் மார்க்கட்டில்தான் விலைகளைத் தீர்மானிக்கிறார்கள். தமிழ் நாட்டிலேயே இந்தப் பஞ்சை உற்பத்தி செய்வதற்கான முயற்சியை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டிலேயே உற்பத்தியைப் பெருக்க தனியாக இந்த ஆண்டு வேளாண்மைத் துறையிலே ஒரு திட்டம் போடப்பட்டிருக்கிறது.

Powerlooms

* 52 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Industries pleased to state the details regarding the phased increase of powerlooms and supply of the same to Handloom weavers of this State?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் படிப்படியாக அனுமதிக்கப் படுவதற்கென ஒதுக்கப்பட்ட 12,500 விசைத்தறிகளில் 1,000 விசைத் தறிகள் 1970-71-ல் ஏற்கனவே கீழ்க்கண்ட வகையில் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

1. நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்—500.
2. தனிப்பட்ட நெசவாளர்கள்—500.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, in view of the increasing competition from Surat and other places in the matter of powerlooms, will this Government take steps to convert immediately the handlooms in our State into powerlooms and give adequate financial assistance for such conversion?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விசைத்தறிகள் இந்த நாட்டில் முழுக்க முழுக்க கைத்தறிக்கு மாற்றாக அமைய வேண்டுமென்று கனம் அங்கத்தினர் கூறிய யோசனையை இந்த மன்றத்தில் அவர்கள் கூறியதற்காக நன்றி கூறிக் கொள்கிறேன். வெளியே எதிர்ப்பதாகத் தெரிகிறது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரை கனம் அங்கத்தினர் யோசனையை ஏற்றுக் கொண்டு உடனடியாக எல்லாக் கைத்தறியையும் ஒழிப்பதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. நெசவாளர்களுக்கும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மட்டும் விசைத் தறிகளைக் கொடுத்து வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படாத அளவுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக கொண்டு வர வேண்டுமென்பதுதான் எங்களுடைய கொள்கை. கைத்தறியே வேண்டாமென்று சொன்ன கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.